1990 ஏப்ரல் 9]

படகுப் போக்குவரத்துத் திட்டம்.

*7984 திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலிருந்து தமிழகத்தின் கடற்கரை ஊர்களை அடையும் வகையில் சிறு கப்பல் அல்லது படகு போக்குவரத்துத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து பாண்டிச்சேரி, கடலூர் மற்றும் கடலோர ஊர்களுக்கு படகுப் போக்குவரத்துத் திட்டம் அரசினுடைய ஆய்வில் உள்ளது.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரையிலும் இந்தக் கடல் வழியாகச் செல்லக்கூடிய போக்குவரத்தைச் செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9.25 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலைப் போக்குவரத்தினுடைய நெரிசலைக் குறைக்கின்ற அடிப்படையிலேதான், கடல் வழிப் போக்குவரத்தைத் தொடங்கலாம் என்ற கருத்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களால் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கருத்தினுடைய அடிப்படையில் பாண்டிச்சேரி மற்றும் கடலூர், அதேபோல மற்ற கடலோரப் பகுதியில் இருக்கக்கூடிய ஊர்களுக்குப் படகுப் போக்குவரத்து Hydro Foil Service அல்லது சிறிய கடல் போக்குவரத்து நடத்தலாம் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கின்றது. அதனுடைய அடிப்படையில் ஒரு ஆய்வு அறிக்கை, ஒரு 'ஃபீசிபிலிட்டி ரிப்போர்ட்' கொடுக்க வேண்டுமென்று பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனிடத்தில் அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் நீண்டகாலமாக பயன்பட்டு வருகிற துறைமுகம். அது சென்னையிலிருந்து அதிக தூரத்தில் இருக்கிறது. அமைச்சர் அவர்களின் பதிலில் தூத்துக்குடியைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே, தூத்துக்குடியையும் சென்னையையும் இணைக்கிற வகையில் சிறு கப்பல் அல்லது படகுப் போக்குவரத்தை நடத்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நான் பதிலில் சென்னையிலிருந்து கடலோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய நகரங்கள் என்று ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன். அதில் தூத்துக்குடியும் அடங்கும்.

திரு. செ. நூர்முகமது ; தலைவர் அவர்களே, தூத்துக்குடியை சென்னையோடு கடல்வழிப் பாதையில் இணைப்பது பற்றி ஆய்வு செய்வதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வாறு இணைக்கிறபோது கடலோரத்தில் இருக்கிற கவின்மிகு கன்னியாகுமரியையும் இணைப்பதற்கு அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, இராமேஸ்வரம், தூத்துக்குடி, கடலூர், பாண்டிச்சேரி, மகாபலிபுரம் இன்னும் கடலோரத்தில் இருக்கக்கூடிய முக்கியமான நகரங்களை இணைக்கிற வகையில்தான் இந்த படகு போக்குவரத்தை நடத்துவதற்கு அரசு ஆலோசித்து இருக்கிறது. முதல் கட்டமாக பாண்டிச்சேரி, கடலூர் வரையில் விடுவதற்கு எந்த அளவிற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும் என்பதை பற்றிதான் அரசு ஆராய்ந்து இருக்கிறது. மேற்கொண்டு கடலோரப் பகுதிகளில் இருக்கிற ஊர்களுக்கும் இந்தப் படகு போக்குவரத்தை விஸ்தரிப்பது பற்றி அரசு ஆய்வு செய்யும்.

பாரிமுனையில் ஒருவழிப் பாதை

* 9030 திருமதி எஸ். பி. சற்குணம்

திரு. உ. ரா. வரதராசன்

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, பாரிமுனையில் பேருந்து போக்குவரத்து ஒருவழிப் பாதையாக இருப்பது மாற்றப்படுமா?